**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 6 May 2021



மேம்பாட்டுப் பிரிவின் கீழ் யேல்-என்யுஎஸ் கல்லூரி தங்க விருதைப் பெற்றதுடன் சமூக நலன்-ஈடுபாட்டுக்காக சிறப்பு அங்கீகாரத்தையும் பெற்றது. எடுத்துக்காட்டாக, இந்தக் கல்லூரி அதன் மொட்டைமாடிப் பகுதியை சமூகத் தோட்டமாக மாற்றியது. மேலும், கல்லூரி வளாகத்தில் உள்ள குளத்தில் தட்டாம்பூச்சிகளுக்காக ஒரு பகுதியை உருவாக்கியுள்ளது. கல்லூரியின் காய்கறித் தேவையில் 10 விழுக்காட்டை மூன்று ஆண்டுகளில் இந்த சமூகத்தோட்டத்தில் விளைவிக்க கல்லூரி திட்டமிட்டுள்ளது. **படம்: யேல்-என்யுஎஸ் கல்லூரி**

# வனப்புக்கும் பசுமைக்கும் விருது பெற்ற 27 பூங்காக்கள், மேம்பாடுகள்

சிங்கப்பூரில் மொத்தம் 27 பூங்காக்களும் மேம்பாட்டுப் பணிகளும் தேசிய பூங்கா கழகத்தின் மேம்படுத்தப்பட்ட சான்றிதழ் திட்டத்தின் கீழ் சிறந்த நிலவனப்பு வடிவமைப்பு, நிர்வாகத்துக்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

2020ன் நிலவனப்பு வடிவமைப்பு உன்னத மதிப்பீட்டுக் கட்டமைப்பு சான்றிதழ் திட்டம், தற்போது, வடிவமைப்பிலும் பூங்கா நிர்வாகத்திலும் 'இயற்கை நகரம்' இலக்கிற்கு ஏற்ப சூழலியலுக்கும் பசுமைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.

விருது பெற்றவற்றில், யேல்-என்யுஎஸ் கல்லூரி, சிங்கப்பூர் வனவிலங்கு காப்பகத்தின் (வைல்ட்லைஃப் ரிசர்வ்ஸ் சிங்கப்பூர்) மூன்று பூங்காக்கள், ஜூரோங் ஏரி தோட்டங்கள் ஆகியவையும் அடங்கும் என்று தேசிய பூங்காக் கழகம் நேற்று வெளியிட்ட அறிக்கை தெரிவித்தது.

புதிய மேம்பாடுகளையும் ஏற்கெனவே உள்ள மேம்பாடுகளையும் அங்கீகரிக்கும் 2013ல் தொடங்கப்பட்ட இந்த ஆண்டு விருதுத் திட்டத்தில், கடந்த ஆண்டு புதிய பிரிவின்கீழ் பூங்காக்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

மேம்பாடுகளைப் போலவே, விருது பெற்ற 12 பூங்காங்களும் வடிவமைப்பு, நிலவனப்பு, நடமாட்ட வசதிகள், சமூக நலனும் ஈடுபாடும், சுற்றுப்புற நிலைத்தன்மை, பாதுகாப்பும் பல்லுயிர்தன்மையும், பராமரிப்பு உத்திகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரிசீலிக்கப்பட்டன. பிளாட்டினம் விருது இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் உயரிய விருதாகும்.

பசுமையுடன் கூடிய உயர்தர நகர்ப்புற நிலவனப்புப் பகுதிகள், தீவு முழுவதும் நகரமயமாக்கலும் பருவநிலை மாற்றங்களும் ஏற்படுத்தும் தாக்கத்தைக் குறைக்க உதவும் என்றார் தேசிய வளர்ச்சி அமைச்சர் டெஸ்மண்ட் லீ.

விருதுபெற்ற 27 அமைப்புகளுக்கும் நேற்று அவர் விருது வழங்கினார்.

தூய்மையான காற்று, சுத்தமான நீர், குளிர்ந்த நகர்ப்புற வெப்பநிலை, உடல்நலத்துக்கும் நல்வாழ்வுக்குமான நன்மைகள் கொண்ட உயர்தர வாழ்வதற்கு ஏற்ற சுற்றுச்சூழலை சிங்கப்பூரர்கள் அனுபவிக்க முடியும் என்றார் அவர்.

சிங்கப்பூரின் 2030 பசுமைத் திட்டத்தை ஒட்டியே பசுமை வடிவமைப்பும் பூங்காக்கள் நிர்வாகமும், மேம்பாடுகளும் உள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

சிங்கப்பூர் விலங்கியல் தோட்டம், நைட் சஃபாரி, ரிவர் சஃபாரி ஆகியவை புதிய பிரிவின் கீழ் பிளாட்டினம் சான்றிதழ் பெற்றன.

அவற்றில் உள்ள விலங்குகளுக்கான மேம்பட்ட வாழ்விடங்கள், பன்முகத்தன்மையையும் இப்பகுதிக்கு உரிய விலங்குகள் நடமாடுவதற்கு கூடுதல் வழிகளையும் கொண்டுள்ளதாக தேசிய பூங்காக் கழகம் கூறியது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.